# IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE COURT CHENGALPATTU

## MCOP No. 34/2023

| | |
|---|---|
| Ranking of Witness | PW.1 |
| Name | மனோஜ் |
| Father's Name/Husband Name | முரளிகிருஷ்ணன் |
| Age | 24 |
| Address | 92/1, பிள்ளையார் கோவில் தெரு, ஆலப்பாக்கம் செங்கல்பட்டு. |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 08.04.2026.

(சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டார்)

**குறுக்கு விசாரணை –**

விபத்து தொடர்பாக என் தந்தைக்கு அங்கிருந்தவர்கள் தொலைபேசியில் தகவல் தெரிவித்து அதன் பிறகு அவர் காவல் நிலையம் சென்று புகார் அளித்தார் என்றால் சரிதான். விபத்து சமயத்தில் அருகில் யாருமில்லை என்றால் சரிதான். விபத்து நடந்த அன்றே என் தந்தை காவல் நிலையம் சென்று புகார் அளித்தார் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்த இழப்பீடு மனுவினை படித்து பார்த்து புரிந்து கொண்டு அதன் பிறகு சரியென கையெழுத்து போட்டு தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். எனது மனுவில் விபத்து சமயத்தில் தலைகவசம் அணிந்திருந்ததாக குறிப்பிட்டுள்ளேனா என்றால் இல்லை. விபத்தில் எனக்கு தலையில் அடிப்படவில்லை. தலையில் அடிப்பட்டிருந்ததாக மனுவில் குறிப்பிட்டிருந்தால் அது பொய். மனு பக்கம் 8 வரி 3ல் Sustained Severe Head Injury என குறிப்பிட்டு உள்ளது என்றால் சரிதான். தலையில் அடிப்பட்டு அதற்காக சிகிச்சைப் பெற்றதாக இவ்வழக்கில் ஆவணங்கள் தாக்கல் செய்திருந்தால் அது தேவையற்ற ஆவணங்கள் என்று

8/4/26

M. Manoj
08/04/2026

சொன்னால் சரிதான். தலையில் அடிப்பட்டதற்காக சிகிச்சை பெற்றிருந்தால் அதற்கான தொகைகள் எனக்குத் தேவையில்லை என்றால் சரிதான். விபத்து சமயத்தில் நான் பொறியியல் பட்ட படிப்பில் இறுதியாண்டு படித்துக் கொண்டிருந்தேன். மார்ச் 2022 ம் ஆண்டு விபத்து ஏற்பட்ட அதே ஆண்டு நான் மே 2022 ல் இறுதியாண்டு தேர்வு எழுதி தேர்ச்சி பெற்றுவிட்டேன் என்றால் சரிதான். அதன்பிறகு வேலைக்கு சேர்ந்தேன் என்றால் உடனடியாக வேலைக்கு சேரவில்லை. ஜனவரி 2023 ல் தான் வேலைக்கு சேர்ந்தேன். நான் Mechanical துறையில் படித்திருந்ததால் எனது கையில் பிளேட் வைக்கப்பட்டிருந்த காரணத்தால் அந்த துறையில் வேலை செய்யமுடியாததால், நான் தனியாக IT Java படித்து அந்த துறையில் தான் ஜனவரி 2023 ல் வேலைக்குச் சேர்ந்தேன். அங்கு எனக்கு மாத ஊதியம் ரூ.10,000/- வழங்கப்பட்டது. தற்போதும் நான் அங்கு தான் வேலை பார்த்து வருகிறேன். தற்போதைய ஊதியம் மாதம் ரூ.18,000/-. விபத்து வளைவான சாலையில் நடந்தது என்றால் சரிதான். அந்த சாலையில் குறுக்கில் நடுசுவர் இருந்ததா என்றால் இல்லை. எதிர் திசையில் வந்த வாகனம் மோதி விபத்து ஏற்பட்டது. விபத்தானது சாலையின் நடுவில் நடைபெற்றதா என்றால் நான் சென்ற திசையில் இடது பகுதியில் எதிர் வாகனம் மோதி விபத்து ஏற்பட்டது. விபத்தானது முழுக்க முழுக்க எனது கவனக்குறைவு மற்றும் அஜாக்கிரதையால் தான் ஏற்பட்டது என்றால் சரியல்ல. எனக்கு ஏற்பட்ட காயங்கள் சொற்ப காயங்கள் தான் என்றும், மனுவிற்காக கொடுங்காயங்கள் என்று பொய்யாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரியல்ல. மருத்துவ ஆவணங்கள் அனைத்தும் வழக்கிற்காக தயார் செய்யப்பட்டவை என்றால் சரியல்ல. மனுவில் வெவ்வேறு தலைப்புகளின் கீழ் கோரியுள்ள தொகைகள்

8/4/2026

M. Mani
08/04/2026

அனைத்தும் மனுவிற்காக அதிகப்படுத்தி குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. 2ம் எதிர்மனுதாரரைப் பொறுத்து இந்த மனு தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை -இல்லை.</u>**

M. mari
08/04/2026

சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு சாட்சி சொல்ல என்னால் தட்டச்சருக்கு சாட்சி கூறியவாறே சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சி படித்துப்பார்த்து சரி என்று ஒப்புக் கொண்டு 08.04.2026 அன்று என் முன்னிலையில் கையொப்பம் செய்தார்.

8/4/26

தலைமை குற்றவியல் நடுவர்,
செங்கல்பட்டு.